அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.04/2002

எனது இல: ஏஆர்/ஐரி/60
அரசாங்க நிர்வாக,முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
2002.05.23

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்

## கணனிப் பயிற்சி நிலையம்/சைபர் மத்திய நிலையம்

அரச அலுவலர்களுக்கான தொலைக்கல்வி கருத்திட்டத்தினால் கொழும்பு.07, தர்மபால மாவத்தை, இலக்கம் 191 இல் அமைந்துள்ள ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையத்தில் கணனி பயிற்சி நிலையமொன்று/ சைபர் மத்திய நிலையமொன்று திறக்கப்பட்டுள்ளது.

இந் நிலையம் மு.ப.7.00 மணி தொடக்கம் மு.ப.9.00 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

அரசாங்க சேவை தொலைக்கல்வி அலுவலகத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட கைநூல்களை உபயோகித்துக் கொண்டு இந் நிறுவனத்தினால் அரச அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

இதற்கு மேலதிகமாக சர்வதேச வலைப்பின்னலை பயன்படுத்தல் ஈமெயில் அனுப்புதல் அல்லது கணனி சொற்களை அமைத்தல் தொடர்பில் அரச அலுவலர்கள் தினமும் மு.ப. 7.30 மணி தொடக்கம் மு.ப.9.00 மணி வரையும் பி.ப.4.00 மணி தொடக்கம் பி.ப.9.00 மணி வரையும் (ஞாயிற்றுக்கிழமை முழுநாளும்) இக் கணனி வசதிகளை உபயோகித்துக் கொள்ளலாம்.

தொடர்ந்து மூன்று நாட்கள் அல்லது வாரத்தில் ஒரு நாள் வீதம் மூன்று வார காலத்தில் கணனிப் பயிற்சியை பெற்றுக் கொள்ள முடியும்.

பயிற்சி பாடநெறி முடிவில் பயிலுநர்கள் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவதுடன் சான்றிதழொன்றும் வழங்கப்படும்.

கொழும்பில் அடைகின்ற அனுபவங்களின் பேரில் தலைமை நகரங்களில் இத்தகைய நிலையங்கள் அமைக்கப்படும்.

கணனி பயிற்சி பாடநெறியை கற்பதற்கு அல்லது சர்வதேச வலைப்பின்னல் வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற அரச ஊழியர்கள் பத்தரமுள்ள, பெலவத்த, டி.பி.விஜேசிங்க மாவத்தை, இலக்கம் 713 இல் அமைந்துள்ள அரச அலுவலர்களுக்கான தொலைக்கல்வி கருத்திட்ட அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் அவர்கள் இணைக்கப்பட்டுள்ள படிவ உருவில் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற விண்ணப்பதாரர்கள் பாடநெறியை கற்கக் கூடியதாக நிறுவனத் தலைவர்கள் அவர்களுக்கு கடமை விடுமுறை வழங்க வேண்டும்.

டிட்டா விமலசிறி
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு

# விண்ணப்பப் பத்திரம்

1. பெயர் :

2. பதவி : தே.அ.அ.இல :

3. அலுவலக முகவரி :

4. விண்ணப்பம் செய்யப்படுவது

| | ஆம் | இல்லை |
|---|---|---|
| 1. கணனி பாடநெறியை கற்பதற்காக | ☐ | ☐ |
| 11. சைபர் வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக | ☐ | ☐ |
| 111. இவ்விரு விடயங்களுக்குமாக | ☐ | ☐ |

திகதி : விண்ணப்பதாரரின் கையொப்பம்

நிறுவனத் தலைவரின் விதப்புரை ☐ ☐

விதிந்துரைக்கின்றேன். .கணனி பாடநெறியை கற்பதற்காக அலுவலரை விடுவிக்க முடியும் ☐ ☐

திகதி : கையொப்பம்

பதவி: